# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.358/2017</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனிவாசன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்து சமயத்தில் நான் இறந்துபோனவருடன் நான் பயணம் செய்யவில்லை. விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன். எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால், விபத்து சமயத்தில் நான் அங்குதான் இருந்தேன். விபத்து நடந்த இடம் திருச்சியில் இருந்து சுமார் 25 கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றும் விஜயகுமார் என்பவர் புகார் கொடுத்தார் என்றால் நான் அவருடன் போயிருந்தேன். நான் புகார் கொடுக்க அவருடன் செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இரண்டு மாருதி Wagon R கார்கள் மோதிக்கொண்டன என்றால் சரிதான். நான் விபத்தில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை. விபத்து நடந்த இடத்தில் சாலையோரம் வீடுகள் கிடையாது என்றால் சரியல்ல. விபத்தை

நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், இறந்துபோனவர் எனது உறவினர்களுக்கு தெரிந்தவர் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.